மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 21–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 123/22
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: சண்முக சுந்தரம் (எ) சுந்தர் தேதி :21.07.25
வயது : த/பெ : முருகன்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>21.07.25 குறுக்கு விசாரணை</u>

1. நான் தாவா வழக்கின் 2 ம் பிரதிவாதி. 1 ம் பிரதிவாதி மகாராஜன் என் சகோதரர். என் தந்தைக்கு நானும், 1 ம் பிரதிவாதியும் மட்டுமே ஆண் வாரிசுகள். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என்னுடை நிரூபண வாக்குமூலத்தில் முருகன் காலம் சென்று விட்டதால் அவருக்கு 1, 2 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பது உண்மையல்ல என்று சொல்லியிருந்தால் அது தவறு. எனக்கு எழுத படிக்க தெரியும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நானும், 1 ம் பிரதிவாதியும் மட்டும் வாரிசுகள் அல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. என்னுடைய நிரூபண வாக்குமூலத்திற்கு நான் விபரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று தெரியும். தாவா இடம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று கேட்டுள்ளார். ஆவண எண் 4842/2012 ல் கண்ட சொத்து எங்களுக்கு நேரடியாக கிரைய பாத்தியம் கிடையாது என்றும் தந்தை மூலமாக பாத்தியம் என்றால் சரிதான். என் தந்தை நாங்கள் குடியிருக்கும் வீட்டை முருகன், சாந்தி ஆகியோரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். ஆவண எண்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.07.21 20:35:00 +0530

265/2009 ன் படி கடந்த 2009 ம் ஆண்டு 5 ம் பிரதிவாதி தங்கராஜிடம் இருந்து அதிகார முகவர் என்ற நிலைமையில் முருகன், சாந்தி கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான்.

3. ஆவண எண் 265/2009 ன் படி முருகன், சாந்தி 2 வீடுகளை கிரையம் பெற்றுள்ளனர். அந்த வீட்டின் கதவு எண்கள் தெரியுமா என்றால் நாங்கள் கிரையம் வாங்கிய வீட்டின் கதவு எண் மட்டும் தான் தெரியும். நாங்கள் கிரையம் வாங்கிய வீட்டின் கதவு எண் 5/12 ஆகும். என் தந்தை கிரையம் வாங்கிய வீட்டின் கதவு எண் 5/11 என்றும், நான் தவறாக கதவு எண் 5/12 என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை கிரையம் வாங்கிய வீட்டின் நான்கு மால்கள் தெரியும். மேற்கில் மாரிமுத்து வீடு, கிழக்கில் தொம்மைபர்னாந்து காலி இடம், தெற்கில் செல்லையா ஆசாரி வீடு, வடக்கில் எங்கள் வீடு.

4. மேற்படி நான்கு மால்கள் தவறு என்றால் சரியல்ல. எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு தாவா வழக்கை நடத்த விருப்பம் இல்லை என்றும், 1 ம் பிரதிவாதியிடம் ஆரம்பத்தில் பெற்ற வக்காலத்தை வைத்து அவருக்கு விருப்பம் இல்லாமல் நான் அவருக்காக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் 1 ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 11 ல் புகைப்படத்தின் பீடத்திற்கு பின்பு இருக்கும் வீடு வாதியின் மகனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5. கற்பகவிநாயகர் கோவில் பக்கம் அமைந்துள்ள பாதாளகரண்டி அம்மன் கோவிலில் இருந்து பிடி மண் எடுத்துக்கொண்டு வந்து வா.சா.ஆ 11 ல் உள்ள பீடம் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பாதாளகரண்டி அம்மன் கோவில் சர்வே

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.07.21 20:35:07 +0530

எண்.751/37 ல் உள்ள எங்கள் இடத்தில் இருந்தது. அதை விற்றுவிட்டோம். என் தந்தை 2012ல் கிரையம் வாங்கிய ஆவணத்தில் பாதாளகரண்டி அம்மன் கோவில் இருந்ததாக துலங்குமா என்றால் துலங்காது.

6. வாதியிடம் அதிகாரம் பெற்று கிரையம் கொடுத்துள்ளதாக மேற்படி 2012ன் கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 03.03.2022 அன்று முறப்பநாடு காவல் நிலையத்தில் எங்கள் மீது நடந்த விசாரணையின் பேரில் எங்கள் மீது வழக்கு போடப்பட்டதா என்றால் இல்லை. விசாரணையில் காவல் துறையினர் மீண்டும் இதுபோன்று நடக்கக்கூடாது என்று எங்களுக்கு அறிவுரை கூறி அனுப்பினர் என்றால் சரிதான்.

7. கற்பக விநாயகர் கோவில் அருகில் உள்ள பாதாளகரண்டி அம்மன் கோவிலுக்கு எங்கள் ஊரில் உள்ள அனைவரும் பூஜை செய்வார்களா என்றால் எங்கள் மருத்துவர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் மட்டும் பூஜை செய்வார்கள். நான் ஷிபா மருத்துவமைனயில் வேலை பார்த்துவருகிறேன். மார்க்கட்டிங் வேலை செய்துவருகிறேன். 1ம் பிரதிவாதி சலூான் கடை வைத்துள்ளார்.என் தந்தை காண்டிரக்டர் வேலை செய்துவந்தார். என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ள என் சித்தப்பா ஆறுமுகம் கார் ஓட்டும் வேலை பார்த்துவருகிறார்.

8. எங்கள் குடும்பத்தில் யாரும் இறப்புக்கு இறுதி சடங்கு செய்யும் வேலை செய்யவில்லை என்றால் 1ம் பிரதிவாதி செய்துவருகிறார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை 2012 ல் கிரையம் பெற்ற ஆவணத்தில் 2ம் தபசிலாக பொது முடுக்குதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் சொல்லியுள்ளது போல் பொது முற்றம் அல்லது காலி மனை என்று மேற்படி 2012 கிரைய ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 2012

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.07.21 20:35:14 +0530

கிரைய ஆவணத்தில் காலி மனை எதுவும் துலங்காது என்றால் சரியல்ல. சர்வே எண்கள். 751/31, 751/35 ஆகியவற்றிற்கு வாதி பெயரில் 2013 ல் தனிபட்டா ஏற்பட்டு விட்டது என்றால் பட்டா அவர்கள் பெயரில் உள்ளது. பத்திரம் எங்கள் பெயரில் உள்ளது. நான் அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. 2013 ல் ஏற்பட்ட தனிபட்டாவினை ரத்து செய்ய கோரி நாங்கள் மனு கொடுத்துள்ளோம். 2023 ல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளோம். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு மனு கொடுத்தோமா என்றால் இல்லை. நாங்கள் மனு கொடுத்தபிறகுதான் வாதி வழக்கு போட்டுள்ளார். வாதி 2022 ல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. பட்டாவை ரத்து செய்ய மனு கொடுத்தது சம்பந்தமாக எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 11 ல் உள்ள பீடத்தினை எங்கள் தந்தைதான் கட்டினார். இதுப்பற்றி எங்கள் எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சமீபத்தில் மேற்படி பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பினை நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து செய்தோம். மேற்படி புனரமைப்பு செலவு மற்றும் என் அண்ணன் 1ம் பிரதிவாதியின் வீடு சம்பந்தமாகவும் மனஸ்தாபம் ஏற்பட்டு பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல.

11. வாதி நேரடியாகவோ முகவர் மூலமாகவோ என் தந்தைக்கோ எங்களுக்கோ எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ 6 பட்டாவில் எனது பெயரும், 1ம் பிரதிவாதி பெயரும் கூட்டாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் புல எண் 751/39 என்றும் உள்ளது. பி.சா.ஆ 6 24.05.2024 ல் பெறப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ 6 ல் எனது

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.07.21 20:35:21 +0530

சகோதரி மாலையம்மாள் மற்றும் தாயார் மாலதி ஆகியோர் பெயர்களும் உள்ளன. பி.சா.ஆ 3 ல் வாதியின் பெயரும் பி.சா.ஆ 4ல் வாதியின் மகன் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. சர்வே எண்கள் 751/31 மற்றும் 751/35 ஆகியவை எங்கள் பெயரில் உள்ளது என்பதற்கான எந்த வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால் தான் அவ்வாறு எந்த வருவாய்த்துறை ஆவணங்கள் எங்கள் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாதாளகரண்டி அம்மன் பீடம் நீண்ட நெடுங்காலமாக இருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தற்கு பின்பு பாதாளகரண்டி அம்மன் கோவில் பீடம் இருப்பதாக அமைத்துள்ளது சட்டவிரோதம் என்றால் சரியல்ல.

13. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்கோரிக்கைப் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பற்றி எதுவும் தெரியாமல் என் சித்தப்பா ஆறுமுகம் சொன்னதன் பேரில் வாதியிடம் பிரச்சனை செய்ததால் தான் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.07.21 20:35:26 +0530